கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

திருச்சபையின் தலைவராம் இயேசு கிறிஸ்துவின் பெரிதான கிருபையால் CSI, பெதஸ்தா தமிழ் திருச்சபையில் கர்த்தருடைய நாமத்தை மகிமைபடுத்தும்படியாக ஆராதனைகள் நடைபெற்று வருகிறது. திருநெல்வேலி திருமண்டலத்தின் அன்பு பேராயர் மகாகனம் Rt. Rev. J.J. கிறிஸ்துதாஸ் ஐயா அவர்களின் ஜெபத்தினாலும், சிறப்பான வழிநடத்துதலினாலும் திருச்சபையின் அனைத்து காரியங்களும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகிற மக்கள் ஆண்டவருடைய சமூகத்தில் ஒன்று கூடி ஆராதனைகள் மூலமாக ஆண்டவரை மகிமைப்படுத்துவதிலும், ஆவிக்குரிய வாழ்க்கையில் பலப்படுவதிலும், திருச்சபையின் மக்கள் ஒருவருக்கொருவர் அன்பிலும், ஐக்கியத்திலும், வளர்வதற்கும் இத்திருச்சபை மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகிறது.

தலையாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் அவயவங்களாக செயல்பட்டு, ஆவியோடும், உண்மையோடும் திரியேக கர்த்தரை ஆராதிப்போம். அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம். ஆண்டவருடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வோம்.

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்,

S. S. J. மார்ட்டின்

திருமண்டல குருத்துவ பயிற்சி ஊழியர்,

திருநெல்வேலி திருமண்டலம்.